# இனப்படுகொலைகளும் ஐக்கிய நாடுகள் சபையின் பொறுப்புக்கூறலும் : ஒரு நுணுக்கப் பகுப்பாய்வு

த.கிருஷ்ணமோகன்


**ஆய்வுச்சுருக்கம்**

*மனிதப்படுகொலை, இனப்படுகொலை மூலம் பல இலட்சம் மக்கள் தமது வாழ்க்கையினை இழந்துள்ளார்கள். பல இலட்சம் மக்கள் இடம் பெயர்ந்துள்ளார்கள். ருவேன்டாவில் சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்டங்கள் மிகவும் பாரியளவில் மீறப்பட்டமையினை தடுக்க முடியாது ஐக்கிய நாடுகள் சபை தோல்வியடைந்தபோது அது முழு உலகிற்குமான தோல்வியாகியது. சிரியா மற்றும் இலங்கையில் வன்னி மக்களுக்கு ஏற்பட்ட துன்பம் இதற்கு மேலும் சாட்சியாகவுள்ளது. மோதலுக்கு சிக்கியுள்ள மக்களைப் பாதுகாக்க ஐக்கிய நாடுகள் சபை செயற்பாட்டுத்திட்டம் ஒன்றை உருவாக்கியது. இச்செயற்பாட்டுத்திட்ட அறிகையில் "மோதல் என்பது ஒரு சோதனை. இது அங்கத்துவ நாடுகளுக்குரிய சோதனையல்ல, பதிலாக ஐக்கிய நாடுகள் சபை தனது பொறுப்பினைநிறைவு செய்வதற்கும், தனது முழுமையான வலுவினைப் பயன்படுத்தி திறமையினை நிலைநிறுத்துவதற்கும் மக்களுக்கான பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கான சோதனையாகும்." எனத் தெரிவித்துள்ளது மனிதப்படுகொலைகள் மற்றும் இனப்படுகொலைகளைத் தடுப்பதற்கான செயற்பாடுகளை தரமுயர்த்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபை அனேக சிபார்சுகளை பல வருடங்களாக முன்மொழிந்து வருகின்றது. ஆனால் அண்மைக்காலத்தில் ருவேன்டா இனப்படுகொலை இலங்கையின் இனப்படுகொலை, சிரியா மனிதப்படுகொலை போன்றவற்றை தடுப்பதில் ஐக்கிய நாடுகள் தோல்வி அடைந்துள்ளது. இதனைத் தொடர்ந்து ருவென்டா, இலங்கை, சிரியா, செர்பெனிக்கா போன்ற நாடுகளில் ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாடுகள் தொடர்பாக உள்ளக விசாரணை நடாத்தப்பட்டதுடன் ஐக்கிய நாடுகள் சபை அமைப்பு ரீதியாக தோல்வியடைந்துள்ளதாக விசாரணை அறிக்கைகள் கூறுகின்றன. பாடங்கள் பலவற்றைக் கற்றும், முறைப்படுத்தப்பட்ட நிறுவனமாக ஐக்கிய நாடுகள் சபை தன்னை இதுவரை மீளமைத்துக் கொள்ளவில்லை என்ற மையப் பொருள் இங்கு ஆய்வு செய்யப்பட்டுள்ளது.*


**திறவுச்சொற்கள் :** ஐக்கியநாடுகள் சபை. பாதுகாப்புச்சபை. இனப்படுகொலை. மனிதப்படுகொலை. பாதுகாப்பிற்குப்பொறுப்பு. யுத்தக்குற்றங்கள்.

**அறிமுகம்**

யூத இனத்தைச் சேர்ந்த சட்டத்தரணியாகிய ராபேல் லெம்கின் (Raphacl Lemkin) ஜேர்மனியில் இரண்டாம் உலக யுத்தத்தின் போது நாசிசப்படைகள் மேற்கொண்ட யூத இனமக்கள் மீதான படுகொலைகளை விபரிக்க ஜினோசைட் (Genocide) (இனப்படு கொலை) என்ற புதிய பதத்தினை ப்பயன்படுத்தியிருந்தார். இவர் Genocide என்ற பதத்தினை புராதன கிரேக்க சொற்பதமாகிய ஜினோ (Geno = Race - இனம்) என்ற பதத்தினையும் புராதன இலத்தீன் சொற்பதமாகிய. சைட் (Cide Killing - bfhiy) என்ற பதத்தினையும் இணைத்து Genocide என்ற ஆங்கிலப்பதத்தினை உருவாக்கியிருந்தார். இருபதாம் நூற்றாண்டில் ஏறக்குறைய 174 மில்லியன் மக்கள் (ஆண்கள், பெண்கள், சிறுவர்கள்) இனப் படுகொலை அல்லது மனிதப்படுகொலைகளால் மரணித்துள்ளார்கள். ஹிட்லர் காலத்தில் ஜேர்மனியில் 21 மில்லியன் மக்களும், சோவியத் ரஸ்சியாவில் லெனின் மற்றும் ஸ்ராலின் பதவிக்காலத்தில் 62 மில்லியன் மக்களும், மாவோ சேதுங்காலத்தில் 35 மில்லியன் மக்களும் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். பல இலட்சம் மக்கள் சித்திரவதைக்கும் பாலியல் வன்முறைக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளதுடன், தமது இருப்பிடங்களிலிருந்து பலாத்காரமாக வெளியேற்றப்பட்டுள்ளார்கள். ஐக்கிய நாடுகள் சபை இனப்படுகொலையினைத் தடுப்பதற்கு முனைப்பான பல செயற்பாடுகளைச் செய்து

வந்தாலும் இனப்படுகொலையும் மக்கள் படுகொலையும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு இருப்பதற்குப் பல சம்பவங்களை உதாரணமாக காட்ட முடியும். இந்நிலையில் மனிதப் படுகொலைகள் மற்றும் இனப்படுகொலைகளைத் தடுப்பதற்கான செயற்பாடுகளை தரமுயர்த்து வதற்கு ஐக்கிய நாடுகள் முயற்சித்துள்ளதா? ருவென்டா, இலங்கை இனப்படுகொலை, சிரியா மனிதப்படு கொலை போன்றவற்றைத் தடுப்பதில் ஐக்கிய நாடுகள் சபை ஏன் தோல்வி அடைந்தது? இலங்கையில் ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாடுகள் தொடர்பாக உள்ளக விசாரணை எதனை வலியுறுத்தியுள்ளது? பாடங்கள் பலவற்றைக் கற்றும் முறைப்படுத்தப்பட்ட நிறுவனமாக ஐக்கிய நாடுகள் சபை தன்னை இதுவரை மீளமைத்துக் கொள்ளாமைக்கு காரணங்கள் என்ன? போன்ற வினாக்களுக்கு இக்கட்டுரை விடையளித்துள்ளது. இதற்காகத் தேவையான தரவுகள் அனைத்தும் இணையத்தளங்களூடாகப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

### இனப்படுகொலைகளைத் தடுக்கும் சட்டங்கள்

ஐக்கிய நாடுகள் பொதுச்சபை 1946ஆம் ஆண்டு இனப்படுகொலை தொடர்பாக புதிய தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. இத் தீர்மானத்தின் அடிப்படையில் சர்வதேசச் சட்டத்தின் விதிகளுக்குள் இனப்படுகொலை ஒரு யுத்தக் குற்றமாக ஏற்றுக் கொள்ளப் பட்டது. ஆனால் யுத்தக்குற்றம் என்றால் என்ன? என்பதற்கான சட்டபூர்வமான வரைவிலக்கணத்தை இத் தீர்மானம் அப்போது உருவாக்கவில்லை 1948ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச்சபை இனப்படுகொலையினைத் "தடுத்தலும் தண்டனையும்" (Prevention and Punish- mant) என்றதொரு புதிய தீர்மானத்தினை நிறை வேற்றியது. (United Nations General Assembly, 1948) இத்தீர்மானத்தின் அடிப்படையில் இனப் படுகொலை என்பதற்கான வரைவிலக்கணம் முதல் தடவையாக உருவாக்கப்பட்டது. இது நிகழ்ந்து ஏறக்குறைய ஐம்பது வருடங்களுக்குப் பின்னர் இனப்படுகொலைகளுக்கு எதிரான சட்டத்தினைப் பாதுகாப்பதற்கான பொறுப்பு ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச்சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. இனப்படுகொலை மற்றும் மக்கள் படுகொலை என்ற பதம் இரண்டு அர்த்தத்தில் பயன்படுத்தப்படுகின்றது.

1. உள்நாட்டில் அரசியல், பொருளாதாரக் காரணங்களினால் திட்டமிடப்பட்டு நடைபெறும் மக்கள் படுகொலை மற்றும் இனப்படுகொலை
2. ஏதாவதொரு காரணத்தினால் உதவியற்றிருக்கும் ஆயுதப்பலமற்றிருக்கும் மக்கள் மீது அல்லது இனத்தின் மீது சர்வதேச அரசாங்கம் மேற் கொள்ளும் படுகொலை

மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள், இனச்சுத்திகரிப்பு, யுத்தக் குற்றங்கள் இனப்படு கொலை போன்றவற்றிலிருந்து பொதுமக்களைப் பாதுகாக்கும் பொறுப்புத் தொடர்பாக 2005 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச்சபை தீர்மானங்களின் பந்திகள் 138 மற்றும் 139 ஆகிய இரண்டும் எடுத்துக் கூறுகின்றன (United Nations General Assembly2005) இப்பந்திகள் இரண்டும் 2006 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 28ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 1674ஆம் இலக்கத் தீர்மானத்தின் மூலம் "ஆயுத மோதல்களின் போது பொதுமக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு, பாதுகாப்புச் சபைக்கு உள்ளது" எனத் திருத்தப் பட்டது. (Security Council Resolution 1674, 2006) இதன் பின்னர் இனப்படுகொலை என்பதற்கான வரைவிலக்கணத்தை 2008ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை "பாலியல் வன்முறை, பாலியல்ரீதியான ஏனைய வன்முறைகள் என்பனவும் யுத்தக்குற்றங்களாகவும், மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்களாகவும் கருதப்படும் என 1820ஆம் இலக்க தீர்மானத்தின் மூலம் மேலும் விரிவுபடுத்தப்பட்டது. (Security Council Resolution 1820,2008) "1990ஆம் ஆண்டு பனிப்போர் முடிவிற்கு வந்து உலகம் யுத்த சூழலிலிருந்து விடுபட்ட பின்னர் ஐக்கிய நாடுகள் சபைக்குள் புதிய நல்ல மாற்றங்கள் நிகழும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருந்ததுடன் கடந்த பல வருடங்களாக பாரிய சித்தாந்த வேறுபாடுகளால் உருவாக்கிய இணைபிரியாத பாரிய அழிவிற்கான விரோதம், நம்பிக்கையீனம் என்பவற்றால் வழிநடாத்தப்பட்ட நிலை இப்போது தகர்ந்துள்ளது" என ஐக்கிய நாடுகள் சபையின்

பொதுச்செயலாளர் பூட்ரஸ் -பூட்ரஸ் - காலி (Boutras Boutras - Ghali) "சமாதானத்தையடைதல், சமாதானத்தை உருவாக்குதல் மற்றும் சமாதான பாதுகாப்பு தந்திரோபாயத்திற்கான நிகழ்ச்சி (An Agenda for Peace Preventive diplomacy. Peace making and peace Keeping) என்னும் அறிக்கையில் (Report of the secretary General, 1992) கூறியுள்ளார்.

### மக்கள் படுகொலைகளைத் தடுக்கும் பொறிமுறை

2012ஆம் ஆண்டு சித்திரை மாதம் படுகொலைகளைத் தடுக்கும் சபை என்ற பெயரில் புதிய சபையொன்று ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவினால் உருவாக்கப்பட்டது. (James P. Finkel 2014) இச்சபை இனப்படுகொலை மற்றும் மக்கள் படுகொலைகளைத் தடுப்பதற்கு மிக முக்கியத்துவம் கொடுத்து செயற்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. ஆயினும் அறுபத்தியொன்பது வருடங்களுக்கு (1945 - 2014) முன்னர் நிகழ்ந்த யூதர்கள் படுகொலை இருபது வருடங்களுக்கு (1994 - 2014) முன்னர் நிகழ்ந்த ரூவென்டா இனப்படுகொலை என்பவைகளுக்குப் பின்னரும், இனப்படுகொலை மற்றும் மக்கள் படுகொலைகளைத் தடுக்கும் ஐக்கிய அமெரிக்காவின் கொள்கைகளில் குறைபாடுகள். காணப்பட்டன என்பதை சிரியா, சூடான், இலங்கை போன்ற நாடுகளில் நடைபெற்ற மக்கள் மற்றும் இனப்படுகொலைகள் எடுத்துக்காட்டின. மக்கள்படுகொலை மற்றும் இனப்படுகொலைகளைச் செய்யும் குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டுத் தண்டிக்கப் படுவதன் மூலமே எதிர்காலத்தில் இனப்படுகொலைகளைத் தடுப்பதற்கும், சமாதானத்தை உருவாக்குவதற்கும் இதன் மூலம் நீதியான உலகசமுதாயத்தினை உருவாக்குவதற்குமான சூழல் உருவாக முடியும். யுத்தக் குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்துவதற்கும், விசாரணை செய்வதற்கும் சர்வதேச சமூகம் தயாராவதற்கு இன்னமும் எவ்வளவு காலம் செல்லும் என்பதை அல்லது இன்னமும் எத்தனை தடைகளைத் தாண்டிச் சர்வதேச சமூகம் முன்னேற வேண்டும் என்பதை சரியாக கணிப்பிட வேண்டிய தேவை உருவாகியுள்ளது. ஏனெனில் மக்கள் படுகொலைகள் மீண்டும் நடைபெறுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

ஆயினும் அண்மைக்காலங்களில் மக்கள் படுகொலைகள், இனப்படுகொலைகளைச் செய்கின்ற குற்றவாளிகளை நீதியின் முன்நிறுத்தி பொறுப்புக்கூறவைத்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பிராந்திய தீர்ப்புமன்றம், உண்மைகள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுக்கள் போன்ற பொறிமுறைகள் சர்வதேச சமூகம் உருவாக்கியுள்ளதை அவதானிக்க முடிகின்றது. 2002ஆம் ஆண்டு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் உருவாக்கப்பட்டதுடன் இந் நீதிமன்றம் யுத்தக்குற்றம், மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றம் இனப்படுகொலை போன்றவற்றினை விசாரிக்கும் பொறுப்பினை ஏற்றுக்கொண்டது (International Criminal Court, 2002). சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் கங்கோ, சூடான், லிபியா, கென்யா, உகண்டா, போன்ற நாடு களில் நடைபெற்ற யுத்தக்குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் மீது விசாரணைகளை மேற்கொண்டு வந்துள்ளது. இவ்வகையில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், பாதிக்கப்பட்ட மக்கள் சர்வதேச நீதியைப் பெற்றுக்கொள்வதற்கான சின்னமாகக் கருதப்படுகிறது. சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பாதிக்கப்பட்ட மக்கள் சர்வதேச நீதியைப் பெற்றுக் கொள்வதற்காக உருவாக்கப்படுவதற்கு முன்னர் சர்வதேச நீதிமன்றம், தீர்ப்புமன்றம் என்பன உருவாக்கப்பட்டு குறிப்பிட்ட நாடு ஒன்றினுள் சர்வதேச மனிதாபிமானச்சட்டம் மிகவும் கொடூரமாக மீறப்பட்டமை அல்லது இனப்படுகொலை செய்வதாகக் குற்றச் சாட்டிற் குள்ளாக்கப்பட்டவர்கள் மீது விசாரணை நடாத்த முயற்சித்தது. இதற்கமைய கம்போடியா, யுகோஸ்லேவேக்கியா, ருவென்டா போன்ற நாடுகளில் நடைபெற்ற மனிதப்படுகொலைகளை விசாரணை செய்வதற்காக ஐக்கிய நாடுகள் சபை பல நீதிமன்றங்களையும் தீர்ப்புமன்றங்களையும் உருவாக்கி விசாரணை செய்துள்ளமை கருத்தில் கொள்ளப்படல் வேண்டும். லைபீரியா, குவாட்டமாலா, ஆர்ஜன்ரீனா, எல்சல்வடோர், தென்ஆபிரிக்கா உட்பட முப்பது நாடுகளில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு உருவாக்கப்பட்டது. உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் தேசிய நல்லிணக்கத்திற்கு பங்களிப்புச் செய்ய முடிந்ததுடன் பாதிக்கப்பட்ட மக்களின் குடும்பத்தினருக்கு உதவியும் செய்ய

முடிந்துள்ளது. மனிதப்படு கொலைகள் தொடர்பான உண்மைகளைத் தேடுவதற்குத் தேவையான தகவல்களை வழங்குவதற்கான தகவல் வங்கியாகவும் இது செயற்படுகின்றது.

**பாதுகாப்பிற்குப் பொறுப்பு**

1990கள் வரை உலக சமாதானத்தினை ஏற்படுத்துவதில் ஐக்கிய நாடுகள் சபை அடைந்த தோல்விக்குப் பின்னர் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளராக கோபி அனான் பதவியேற்றார். ஐக்கிய அமெரிக்காவின் பூகோள மோதல்களில் தலையீடு செய்யும் அணுகுமுறையுடன் (Interventionist approach to global conflicts) மிகவும் நெருக்கமாக இருந்து கோபி அனான் பணியாற்றினார். கோபி அனான் காலத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் "பாதுகாப்பிற்குப் பொறுப்பு" (Responsibility to Protect - R2P) என்னும் கோட்பாடு உருவாக்கப்பட்டது. (R2P - A Short History, 2015) இக் கோட்பாட்டின் தீவிரத்தன்மை 2005ஆம் ஆண்டு குறைவடைந்ததாயினும் இதன் பின்னர் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் அறுபதாவது வருடாந்த பொதுச் கூட்டத்தில் அங்கத்துவ நாடுகள் மற்றும் சர்வதேச சமூகம் என்பன கூட்டாக இணைந்து உலக மக்களின் "பாதுகாப்பிற்குப் பொறுப்பு" என்ற கொள்கையினை ஏற்றுக்கொண்டன.

மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள், இனச்சுத்திகரிப்பு, யுத்தக்குற்றங்கள், இனப் படுகொலை போன்றவற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்கின்ற பொறுப்பு ஒவ்வொரு அரசிற்கும் உள்ளது. இவ்வகையில் "நாங்கள் இந்தப் பொறுப்பினை ஏற்றுக்கொள்கின்றோம். இதன் படி நாங்கள் செயற்படுவோம்" (Jum Garrigues 2007) என இக் கொள்கையினை ஏற்றுக்கொண்ட நாடுகள் உறுதியெடுத்துள்ளன. அதேநேரம் மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள், இனச்சுத்திகரிப்பு, யுத்தக்குற்றங்கள், இனப்படுகொலை போன்றவற்றிலிருந்து தனது மக்களைப் பாதுகாக்கின்ற (பொறுப்பு ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக்கு ஊடாக சர்வதேச சமூகத்திற்கும் உள்ளது. மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் , இனச்சுத்தி கரிப்பு, யுத்தக்குற்றங்கள் இனப்படுகொலை போன்றவற்றிலிருந்து தனது மக்களைப் பாதுகாக்கின்ற) பொறுப்பிலிருந்து ஒரு அரசு தோல்வியடைந்தால் குறிப்பிட்ட நேரத்தில் நிகழும்முடிவான படுகொலையிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் சாசனம் அத்தியாயம் vii ஏற்ப பாதுகாப்புச் சபைக்கு ஊடாக சர்வதேச சமூகம் கூட்டாகச் செயற்பட முடியும்.

பாதுகாப்பிற்குப் பொறுப்பு என்ற கொள்கையினடிப்படையில் சர்வதேச சமூகம் பின்வரும் மூன்று விடயங்களுக்குப் பொறுப்பானதாகும். (The Responsibitlity in Protect, 2001)

1. தடுத்து நிறுத்தும் பொறுப்பு
2. எதிர்வினைப் பொறுப்பு
3. இழந்த நம்பிக்கையினை மீண்டும் பெறுவதற்குப் பொறுப்பு

பாதுகாப்பிற்குப் பொறுப்பு என்ற கொள்கையின் படி மக்கள் படுகொலையினைத் தடுப்பதற்குச் சர்வதேச சமூகம் முதன்மையான முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். மனிதப்படுகொலை அல்லது இனப்படுகொலை நிகழ்வதற்கு முன்னர் தடுப்பது அல்லது மோதல் மற்றும் தகராறினைத் தடுப்பதற்கான உத்தரவாதத்தினை வழங்குவதற்கு நேரத்தையும், வளத்தையும் ஒதுக்க வேண்டியதும், சர்வதேச சமூகத்தின் அதற்கான எதிர்வினைச் செயற்பாட்டினைச் செய்யும் பொறுப்புள்ளது. மக்கள் படு கொலைகள் எழுச்சியடையும் போது சர்வதேச சமூகம் அதனைத் தடுப்பதற்கு சாத்தியமான தலையீட்டினையும் நிர்ப்பந்தத்தினையும் செய்ய வேண்டும். பாதுகாப்பிற்கு பொறுப்பு என்ற கொள்கை சிலநேரங்களில் இராணுவத் தலையீடு அவசியமானது என்பதை அங்கிகரிக் கின்றது. (The Responsibility to protect, 2001) ஆனால் தற்பாதுகாப்புத் தேவையுள்ளது எனக் கருதப்படும் சந்தர்ப்பங்களில் மாத்திரமே இராணுவ தலையீடு செய்ய முடியும். இராணுவத் தலையீடு நிகழ்ந்தால் தலையீட்டிற்குப் பின்னரான நல்லிணக்கம் மற்றும் மீள்கட்டுமானப் பணிகளுக்கு சர்வதேச சமூகம் பொறுப்பானதாகும். (The Responsibility to protect, 2001). [ஆனால் தற்பாதுகாப்புத் தேவையுள்ளது என கருதப்படும் சந்தர்ப்பங்களில் மாத்திரமே இராணுவத் தலையீடு நிகழ்ந்தால், தலையீட்டிற்குப் பின்னரான நல் லிணக்கம் மற்றும் மீள்கட்டுமானப் பணிகளுக்கு சர்வதேச சமூகம் பொறுப்பானதாகும் (The Responsibility to protect 2001)]

## செயற்பாட்டுத் தோல்வி

இருபத்தியோராம் நூற்றாண்டில் முதலாவது இனப்படுகொலை 2003 ஆம் ஆண்டு சூடான் நாட்டின் மேற்குப்பகுதியில் உள்ள டர்பார் (Darfur) பிரதேசத்தில் ஆரம்பமாகியது. கொபி அனான் காலத்தில் டர்பார் மோதல் உட்பட ஆபிரிக்காவில் நடைபெற்ற பல மோதல்கள் ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானில் மேற்கொள்ளப்பட்ட ஐக்கிய அமெரிக்காவின் தலையீடு, கொசோவோ மோதல், 2011ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் ஐக்கிய அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்களின் மீது அல்கொய் தா இயக்கம் நடாத்திய தாக்குதல் போன்ற நிகழ்வுகளால் சர்வதேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் நிலைநிறுத்துவதில் ஐக்கிய நாடுகள் சபை பல சவால்களை எதிர்கொண்டது.

ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலாளராக இருந்த அனுபவத்தினடிப்படையில் கோபி அனான் "தலையீடு: யுத்தம் மற்றும் சமாதானத்தில் ஒரு வாழ்க்கை" (Interventions: A Life in War and Peace) என்னும் தலைப்பில் எழுதிய சுயசரிதையில் "பனிப்போரின் பின்னர் உலக சமாதானத்தினை ஏற்படுத்துவதில் ஐக்கிய நாடுகள் சபைக்கு இருந்த பிரச்சினைகள் மற்றும் தோல்விகளுக்கும் சில விடைகளைக் கூறலாம்" (Jonathan Powell, 2012) எனக் கூறுகின்றார். ஆயினும் இதனை ஜோனாதன் பவல் (Jonathan powell) 'கொபி அனானின் சுயசரிதை தேவையற்ற சுயநியாயத்தைத் தருகிறது. மோதலைத் தவிர்ப்பதற்காக பிற நாடுகளில் தலையிடுவதில் மட்டும் சார்ந்திருக்க முடியாது என்ற யதார்த்தத்தைக் கொபி அனான் மிகவும் காலம் தாழ்த்திப் புரிந்து கொண்டிருக்கக் கூடும்" (Jonanthan Powell, 2012) எனக் கேலி செய்கின்றார்.

இதன்பின்னர் 'குறைந்த வாக்குறுதி கூடிய சேவை' என்ற தூரநோக்கினை முன்நிறுத்தி ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளராக பான் - கீ - முன் கடமையாற்றத் தொடங்கினார். ஆனால் பாதுகாப்பிற்கான பொறுப்பினை பொதுச்செயலாளராக இல்லாமல் சாதாரண தொழிலதிபர் போன்று செயற்படுவதாகவும் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டு கீழ்ப்படிந்து செயற்படுவதற்காக "ஆரவாரம் எதுவுமில்லாது செயற்படுதல்" என்ற தந்திரோபாயத்தைக் கையாளுகின்றார் எனவும் விமர்சிக்கப்பட்டார். ஆயினும், இவ் விமர்சனங்களைப் பொறுப்பெடுத்துக் கொண்டு யுத்தங்களின் போது பொதுமக்கள் படுகொலை தொடர்பான குற்றங்களைத் தடுப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபைக்குள் நிறுவன ரீதியான மாற்றங்களைச் செய்து, பாதுகாப்பிற்கான பொறுப்பினை நிறைவேற்ற விசேட ஆலோசகர் ஒருவரை நியமித்திருந்தார். ஆயினும் 2009ஆம் ஆண்டு இவர் கையளித்த அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு பாதுகாப்பிற்குப் பொறுப்பு என்ற தத்துவத்தினை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான - உறுதியான கருத்துத் தெளிவினை உருவாக்க பான் - கீ - முன் தவறிவிட்டார் என்ற குற்றச்சாட்டும் இவர் மீது சுமத்தப்பட்டுள்ளது. ஜேர்மனியில் (1945) நிகழ்ந்த மக்கள் படுகொலைகளைத் தொடர்ந்து ஐக்கிய அமெரிக்கா உட்பட உலகத் தலைவர்கள் "மீண்டும் நிகழாது" என்ற பிரகடனத்தை வெளியிட்டார்கள். ஆனால் இதன் பின்னர் கம்போடியா பொஸ்னியா, ருவெண்டா மற்றும் சூடான் (டர்பார் - இனப்படுகொலை இலங்கை போன்ற நாடுகளில் பல இலட்சம் மக்கள் தமது உயிரையும், குடும்பத்தையும் இழந்துள்ளனர். தாய் நாட்டை விட்டு துரத்தப்பட்டுள்ளனர். (Genocide in Darfur) இதன் பின்னர் மக்கள் படுகொலை மற்றும் இனப்படுகொலைகளைத் தடுப்பதற்கும், அதனைத் தடுப்பதற்குரிய உத்தரவாதத்தினையும், ஐக்கிய அமெரிக்கா தருவதாக 2012ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அறிவித்திருந்தார். (IC 'Refd' 2012) ஆயினும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்பட்ட இவ் அறிவிப்பு அதன் பின்னர் நிகழ்ந்த மனிதப்படுகொலைகளைத் தடுப்பதில் தோல்வி கண்டுவிட்டது.

## இலங்கையின் பாதுகாப்பு

இலங்கையில் இனமோதல் இலங்கைக்கேயுரிய தனித்துவத்தினைக் கொண்டதாகும். யுத்தம் நிகழும் போது சில எண்ணிக்கையிலான பொது மக்கள் மரணிப்பது தவிர்க்க முடியாது. எனவே ஏனைய நாடுகள் இவ்விவகாரத்தில் தலையீடு செய்வது அவசியமற்றது என மேற்குத் தேச வல்லரசுகள் கருதியிருக்கக்கூடும். ஆயினும் வன்னியில் நிகழ்ந்த

யுத்தம் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை முழுமையாக அழிப்பதற்குப் பாதுகாப்புச்சபையின் நிரந்தர அங்கத்துவ நாடுகளின் சம்மதத்துடன் முன்கூட்டியே திட்டமிடப்பட்ட இறுதிவரைக்கு மான யுத்தமாகவும் கருதமுடியும். நோர்வேயின் அனுசரணையுடன் நடாத்தப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தைக் காலத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் பேச்சுவார்த்தைக்குக் கொடுத்த முக்கியத்துவத்தின் மூலம் கிடைத்த அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழீழ விடுதலைப்புலிகளின் இராணுவ மற்றும் அரசியல் பலத்தினை அழித்து விட வேண்டும் என்ற முடிவினைப் பல வாதப்பிரதிவாதத்திற்கும் மத்தியில் ஏகோபித்த முடிவாக மேற்கு தேச நாடுகள் எடுத்திருக்க வாய்ப்புள்ளது. ஆயினும் இலங்கை இராணுவம் தேவையானளவு விதிதா சாரத்திலேயே தனது படைகளை வன்னி யுத்த முனையில் நிறுத்தி வைக்கும் என்றும் இதனால் சகித்துக்கொள்ளக் கூடியளவிற்கே பொதுமக்கள் இழப்பு ஏற்படும் என்றும் சர்வதேச சமூகம் எதிர்பார்த்திருக்கலாம். ஆயினும் இலங்கையில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது பொதுமக்களின் பாதுகாப்பு, சமாதானம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை ஏற்றுக்கொள்ளக்கூடிய எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்கவில்லை. பதிலாக பாதுகாப்புச் சபையிலுள்ள ஐந்து நிரந்தர அங்கத்துவ நாடுகளின் கைப்பொம்மையாகவே ஐக்கிய நாடுகள் பொதுச்சபை செயற்பட்டது. (IC ' Rtol'2012)

ஆயினும் சார்ல்ஸ் பெட்றி உள்ளக அறிக்கை தொடர்பாகப் பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் வெளியிட்ட இரகசியங்களில் சில ஐக்கிய நாடுகள் சபை அங்கத்தவர்களும் பொதுச் செயலாளரும் உறுதியான சில செயற்பாடுகளைச் செய்திருந்ததாகக் கூறியுள்ளது. இதனடிப்படையில் பார்க்கின்றபோது பான்-கீ-மூனின் தலைமைத்துவம் வன்னியில் நடந்த மனிதாபிமான தகராறுகளை எதிர்கொள்வதில் பாரிய சவால்களை எதிர் கொண்டிருக்கலாம் என எண்ணத் தோன்றுகின்றது. 2009ஆம் ஆண்டு வன்னியில் நடைபெற்ற யுத்தத்தின் இறுதிக்காலப் பகுதியில் நிகழ்ந்த மனிதப் படுகொலைகளை ஐக்கிய நாடுகள் சபை தடுக்க முடியாமல் போனமை தொடர்பாகப் பரிசீலனை செய்வதற்கு பொதுச் செயலாளர் பான் -கீ - மூனினால் நியமிக்கப்பட்ட சார்ல்ஸ் பெட்றி வழங்கிய செவ்வியில் "பனிப்போரின் பின்னர் உலகசமாதானத்தினை உருவாக்குதல், சமாதானத்தைப் பேணுதல் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபைக்குள்ள சட்டபூர்வ நிலை தொடர்பாக வித்தியாசமானதொரு காட்சி நிலையினையும் வருந்தத்தக்க நிலையினையும் தான் வெளிப்படுத்தியுள்ளேன்(Graund views, 2012) எனத் தெரிவித்துள்ளமை எல்லோரினதும் கவனத்தை ஈர்த்துள்ளது.

சார்ல்ஸ் பெட்றி தனது அறிக்கையின் இறுதிப் பகுதியில் ஐக்கிய நாடுகள் சபை பொறுப்புக் கூறவேண்டிய பின்வரும் விடயங்களை வெளிப் படுத்தியுள்ளார். (Internal Review, 2012)

1. யுத்தப் பிரதேசத்தில் அகப்பட்டுக்கொண்ட பொதுமக்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கம் கொடுத்த குறைவான புள்ளி விபரங்களின் நம்பகத்தன்மையினை உரிய முறையில் ஐக்கிய நாடுகள் சபை மதிப்பீடு செய்யத் தவறி விட்டது.
2. யுத்தப்பிரதேசத்திற்குள் சிக்கிக்கொண்ட பொது மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் கிடைப்பதைத் தடுக்க இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட தடைகளைத் தகர்க்க ஐக்கிய நாடுகள் சபை தவறிவிட்டது.
3. தாக்குதல்களின் போது மக்கள் கொல்லப்படு வதற்கு இலங்கை அரசாங்கம் பொறுப்பெடுக்க வேண்டும் என்ற அறிவுறுத்தலை வழங்குவதற்கு ஐக்கிய நாடுகள் சபைத் தலைமைச் செயலகம் விருப்பமற்றிருந்தது.
4. இவ்விடயங்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கத்துடனான ஐக்கிய நாடுகள் சபையின் தொடர்பாடல் உறுதியற்றும் திருப்தியற்றும் காணப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபைதனது "பாதுகாக்கும் பொறுப்பு" என்ற கொள்கையில் தோல்வியடைந்துள்ளது.

ஐக்கியநாடுகள் சபையின் அங்கத்தவர்களுக்கும் வல்லரசுகளுக்கும் இடையில் இது தொடர்பாக இருந்த உறவினை பெட்றி பின்வருமாறு விபரிக் கின்றார். "இலங்கையின் உள்நாட்டு யுத்தம் தொடர்பாகப் பொறுப்புக் கூறும் சூழலில்

அங்கத்துவ நாடுகள் அறிந்திருக்க வேண்டிய விடயங்களைத் தவிர்த்துவிட்டு. அங்கத்துவ நாடுகள் மகிழ்ச்சியுடன் அறிந்துகொள்ள விருப்பம் கொண்டிருந்த விடயங்களின் செல்வாக்கிற்குட்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் தொனி, நோக்கம், விடயம் என்பன வெளிப்பட்டன (Internal Review, 2012) எனக் கூறுவதன் மூலம் வன்னி யுத்தமுனையில் அகப்பட்டுக் கொண்ட பொதுமக்களின் பாதுகாப்பு. பொதுமக்களின் உரிமைகள், சமாதானம் என்பவற்றில் கவனம் செலுத்த வேண்டிய அங்கத்துவ நாடுகள் அதில் கவனம் செலுத்தாமல் தமிழீழ விடுதலைப்புலிகள் பூரணமாக அழிக்கப்பட்டு விட்டார்கள் என்ற செய்தியை கேட்பதற்கே ஆவலாக இருந்துள்ளன (Internal Review, 2012) என்பதை பெட்றி மறைமுகமாகக் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

அதேநேரம் இலங்கையில் மிகவும் கொடூரமான மனிதப்படுகொலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது இது தொடர்பாக விவாதிப்பதற்கும் தடுப்பதற்கும் ஐக்கிய நாடுகள் சபை தனது பொதுச்சபையினை அல்லது பாதுகாப்புச்சபையினை அல்லது மனித உரிமைகள் பேரவையினை உடனடியாகக் கூட்டவில்லை, என பெட்றி குற்றம் சாட்டியுள்ளார் (Internal Review, 2012) உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து பலவருடங்களின் பின்னர் பெட்றி அறிக்கை இலங்கையில் நடைபெற்ற சம்பவத்திற்கு போதியளவு பொறுப்புக்கூறுவதற்கு ஐக்கிய நாடுகள் சபை தவறிவிட்டது, இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் மீண்டும் நடைபெறாதிருக்க வேண்டும். அவ்வாறான சூழல் எதிர்காலத்தில் ஏற்படுத்தப்பட்டு மனிதப்பாதுகாப்பினை ஐக்கிய நாடுகள் சபை மிகவும் உயர்ந்தளவில் வழங்குவதற்கான பொறுப்பினை ஏற்கவேண்டும் (internal Review, 2012) எனக் கேட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் ஆவணங்களில் உள்ள "மனித உரிமைகள்" மற்றும் "பாதுகாப்பிற்குப் பொறுப்பு" போன்ற சுலோகங்கள் வல்லரசுகள் தமது நலன்களுக்காகப் பயன்படுத்தும் சுலோ கங்களேயாகும். பெட்றி தனது அறிக்கையின் இறுதிப்பகுதியில் மனித உரிமை மீறல்களைத் தடுத்தல், யுத்தக் குற்றங்களைத் தடுத்தல் போன்ற வற்றிற்கு ஐக்கிய நாடுகள் சபை உத்தரவாதத்தினை வழங்க வேண்டும் எனப் பொதுவாகக் கோருவ தற்குப் பதிலாக யுத்தகாலத்தில் ஐக்கிய நாடுகள் சபை மிகவும் சிறப்பாகப் பணியாற்ற வேண்டும் (Internal Review 2012) என ஆலோசனை கூறியுள்ளார்.

உள்ளக அறிக்கை தொடர்பாக பான் - கீ - மூன் கருத்துக் கூறும் போது "தவறுகளிலிருந்த பாடம்" கற்போம், எமது பொறுப்பை பலப்படுத்துவோம், எதிர்காலத்திற்காகப் பயனுள்ள வகையிலும் அர்த்தத்துடனும் செயற்படுவோம். எமக்கிருந்த தடைகளை வெல்லுவதற்கு எல்லா வகையான மனித நேயத்துடனும் செயற்படுவது எமது கடமையாகும். பொதுமக்கள் பாதுகாக்கப்படுவதை உத்தரவாதப்படுத்துவது முக்கியமானது என் பதை இருபது மாதத்திற்கு மேலாக ஜனாதிபதி பசார் அல்அசாட்டிற்கு (Bashar al Assad) எதிராக சிரியாவில் நிகழும் உள்நாட்டுப் போர் ஞாபகப்படுத்துகின்றது. இப்போரில் ஏறக்குறைய இருபதாயிரம் பொதுமக்கள் இதுவரை கொல் லப்பட்டுள்ளனர். எதிர்காலதனது செயற்பாட்டிற்கு ஆலோசனை கூறுவதற்கும் நிபுணர்கள் குழுவின் சிபார்சுகளைக் கருத்தில் கொள்வதற்கும் சிரேஷ்ட மட்டத்திலான குழுவொன்றை தான் உருவாக்கப் போவதாக கூறியுள்ளார். (Reuters, *2012)* உள்ளக அறிக்கை பான் - கீ -மூனையோ அல்லது கொழும்பிலும் மற்றும் நியூயோர்க்கிலும் பணியாற்றிய நடுத்தர அதிகாரிகளையோ குற்றம் சாட்டவில்லை இவர்கள் மிகவும் சாதுரியமாக இவ்விடயங்களில் அகப்பட்டுக் கொள்ளாமல் தப்பித்து விட்டனர். உண்மையில் ஐக்கிய அமெரிக் காவினாலும் அதன் நட்பு நாடுகளாலும் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் என்ற பெயரில் நடாத்தப்படும் யுத்தங்களுக்கு ஆதரவாக இருப்பதே ஐக்கிய நாடுகள் சபையின் இலக்காக உள்ளது.

வன்னியில் நிகழ்ந்த மனிதப்படுகொலைகளைத் தடுக்க முடியாமல் போனமை ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பு ரீதியான தோல்வி (systemic failure) என உள்ளக அறிக்கை கூறுகின்றது (UN News Centre, 2012). இவ்வாறு உள்ள அறிக்கை கூறுவது ஒன்றும் ஆச்சரியமானதொன்றல்ல இதேபோன்றதொரு அவதானமே 1994 ஆம் ஆண்டுருவேன்டா இனப்படுகொலை தொடர்பாக

ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாடு பற்றிய சுதந்திர விசாரணை என்னும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ் அறிக்கையில் "ருவெண்டாவில் நிகழ்ந்த இனப்படுகொலைகளை தடுக்கவும் நிறுத்தவும் முடியாமல் போனமையின் மூலம் ஐக்கிய நாடுகள் சபை அமைப்பு ரீதியாக முழுமையாகத் தோல்வியடைந்துள்ளது" (Independant inquiry into the action of the United Nations during the 1997 genocide or rwanda, 1999) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. 2000ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஐக்கிய நாடுகள் சபை சமாதான செயற்பாடுக் குழு அறிக்கை இதேமாதிரியானதொரு அறிக்கையினை வெளியிட்டிருந்தது. இதில் "பாதுகாப்புச்சபைக்கு எது தெரிய வேண்டும் எதனை பாதுகாப்புச் சபை கருத்தில் கொள்ள வேண்டும் என்பதை ஐக்கிய நாடுகள் சபை தலைமைச் செயலகம் தெரிவிக்க வேண்டும்" (Report of the Panel on United Nations Peace of Operations, 2000) எனக் கேட்டுள்ளது. எனவே இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் இறுதிநாட்களில் நிகழ்ந்த இனப்படுகொலைகள் தொடர்பான விடயங்களில்கவனம் செலுத்துகின்ற அங்கத்துவ நாடுகளுக்கு ஐக்கிய நாடுகள் சபை பொறுப்பான பதிலைக் கூறுவதாக இருந்தால், அங்கத்துவ நாடுகள் எதனைத் தெரிந்து கொள்ளுதல் வேண்டும்? அங்கத்துவ நாடுகள் எதனை மனதில் நிலைநிறுத்தி இவ்விடயங்களை செவிமடுக்க வேண்டும்? போன்ற வினாக்களின் செல்வாக்கிற்கு உட்பட்டே பதில் கூறவேண்டியிருந்தது.

மிகவும்பரிட்சயமானவழிமுறையாகிய அறிக்கை தயாரித்தல். அதன்மூலமாகப் பாடங்களைக் கற்றுக் கொள்ளுதல் என்பதனூடாக ஐக்கிய நாடுகள் சபை இலங்கையில் அடைந்த தோல்விக்கு நியாயம் கூறுகின்றது. இவ்வகையில் மிகவும் பரிட்சியமான வகையில், வழக்கமான தொனியில் ஐக்கிய நாடுகள் சபை இலங்கையில்தான் அடைந்த தோல்விக்கான நியாயங்களை உள்ளக அறிக்கை மூலம் முன்வைத்துள்ளது. கடந்தகாலத் தோல்விகள் போன்றே விசாரணைகள் மூலம் உண்மைகளைக் கண்டு பிடித்தல் மீண்டும் நடைபெற்றுள்ளது. எனவே உள்ளக அறிக்கை என்ற பெயரில் பழையவிடயங்களைப் புதிய பொதியிலிட்டுத் தந்துள்ளார்கள் எனக் கூறலாம். மேலும் யுத்தக் குற்றம். மனிதாபிமானத் திற்கு எதிரான குற்றங்கள் போன்றவற்றை தடுக்காமல் விட்டதன் மூலம் இலங்கையில் பொதுமக்களின் பாதுகாப்பிற்கு பொறுப்பு என்ற கடமையிலிருந்து ஐக்கிய நாடுகள் சபை விலகிவிட்டது. சர்வதேசளவில் பொதுமக்கள் பாதுகாப்பிற்கு எதிரான குற்றங்கள் தடுக்கப்படுதல் வேண்டும். இதற்குப் பொருத்தமான வகையில் சர்வதேச சமூகம் தனது அரசியல் அபிலாசைகளை உருவாக்கிப் பலப்படுத்த வேண்டும் அப்போதுதான் உலக சமாதானத்தை ஏற்படுத்த முடியும்.

**இன்றைய தேவை**

உலகில் சமாதானத்தை ஏற்படுத்துவதில் ஐக்கிய நாடுகள் சபை தோல்வியடைவதற்கு மனித வளப் பற்றாக்குறையும், நீண்டகாலமாக நீடித்து வரும் நிதிப்பற்றாக்குறையுமே காரணம் எனக் கூறுவதில் எவ்வித உண்மையும் இருக்கமுடியாது. பதிலாக குறிப்பிட்ட மோதல் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை வகிக்க வேண்டிய வகிபாகம் தொடர்பாகத் தீர்மானிக்கும் உண்மையான அதிகார மையம் பாதுகாப்புச் சபையிலும் அதில் அங்கத்துவம் வகிக்கும் நிரந்தர ஐந்து நாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ள ரத்து அதிகாரத்திலும் (Veto Power) தான் நிலை கொண்டுள்ளது. பாதுகாப்புச் சபைக்கு குறிப்பிட்ட மோதல்தொடர்பாகஇருக்கும் அரசியல் நலனே குறிப்பிட்ட மோதலைத் தொடர விடுவதா அல்லது முடிவுக்குக் கொண்டு வருவதா என்பதைத் தீர்மாமனிக்கின்றது. பாதுகாப்புச் சபையினால் ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக்கு அதிகாரபூர்வமாக வழங்கப்பட்ட எல்லைக்குள் இருந்து கொண்டே பொதுச் செயலாளரும் அவருடன் இருக்கும் உத்தி யோகத்தர்களும் பணியாற்றுகின்றார்கள்.

பாதுகாப்புச் சபையும் அதற்கு இருக்கும் தீர்மானிக்கும் அதிகாரமும் ஒத்திசைவில்லா ததும். தேர்ந்தெடுக்கப்பட்டதுமான பாதையூடாக பூகோள மோதல்களை ஐக்கிய நாடுகள் சபை முகாமை செய்வதற்குத் தூண்டுகின்றது. இந்நிலையில் மனித உரிமைகளைப் பாதுகாத்தல், உலக சமாதானம் என்ற இலக்கு நோக்கி ஐக்கிய நாடுகள் சபையும், ஏனைய சர்வதேச நிறுவனங்களும் முன்நோக்கி நகர வேண்டும் என எதிர்பார்ப்பது அர்த்தமற்றதாகும். ஐக்கிய நாடுகள் சபையும், பாதுகாப்புச் சபையும்

மறுசீரமைக்கப்படாத வரையில் ஐந்து நிரந்தர அங்கத்துவ நாடுகளினது நலன்கள் மற்றும் சர்வதேச அரசியல் யதார்த்தம் என்ற வட்டத்திற்குள் ஐக்கிய நாடுகள் சபையின் தோல்வி தொடர்ந்து நீடித்தே செல்லும். இந்நிலையில் ஐக்கிய நாடுகள் சபை இலங்கை அல்லது டர்பார் போன்ற மனதாபிமான தகராறுகளைச் சரியாகக் கையாளும் என எதிர் பார்க்க முடியாது. "பாதுகாப்பிற்குப் பொறுப்பு" என்ற எண்ணக்கரு இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் இறுதிக்காலப் பகுதியில் சம்பிரதாயத்திற்கு அவ்வப்போது கூறப்பட்டாலும், அதனால் எவ்வித பலனும் கிடைக்கவில்லை. பொதுமக்கள் பாதுகாப்பிற்குப் பொறுப்பு என்ற எண்ணக்கரு தொடர்பாக அங்கத்துவ நாடுகளிடமும் பொதுச் செயலாளரிடமும் வேறுபட்ட கருத்தும், அறிவுமே இருந்துள்ளது. இதனால் பாதுகாப்பிற்குப் பொறுப்பு என்பதன் பெறுமதியினை உணர்ந்து அதனை வலியுறுத்திக் கூறுகின்ற ஆற்றல் இவர்களிடம் இல்லாமல் போய்விட்டது. எனவே பாதுகாப்பிற்குப் பொறுப்பு என்ற எண்ணக்கரு ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாடுகளை பலப்படுத்துவதற்குப் பதிலாக மேலும் பலவீனப்படுத்தியுள்ளது.

பொதுமக்களுக்கு எதிரான வன்முறைகளி லிருந்து சர்வதேச மனிதாபிமானச்சட்டம். மனித உரிமை கள் சட்டம் போன்றவற்றைப் பயன்படுத்திப் பொறுப்புடன் பொதுமக்களைப் பாதுகாப்பது என்பது ஐக்கிய நாடுகள் சபையின் தகராற்று முகாமைத்துவக் கட்டமைப்பில் காணப்படும் ஒத்திசைவற்ற செயற்பாட்டால் தோல்வியடைந்து வருகின்றது. ஆயுத மோதல்கள் நிகழும் இடங்களிற்கு அரசியல் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் சட்டம் தொடர்பான அறிவுள்ள உத்தியோகத்தர்கள் தேவையானளவிற்கு அனுப்பப்படுவதில்லை எனப் பொதுவாகக் குற்றம் சுமத்தப்படுகின்றது. அதேநேரம் ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாட்டிற்கு அங்கத்துவ நாடுகளிடமிருந்து போதியளவு அரசியல் ஆதரவு கிடைப்பதில்லை. அதனை உருவாக்குவதற்கு பொதுச்செயலாளர் அலுவலகம் எடுக்கும் முயற்சியும் திருப்தியானதாக இல்லை எனவும் கூறப் படுகின்றது. சர்வதேச மனிதாபிமானச்சட்டம், மற்றும் மனித உரிமைகள் சட்டம் போன்றவற்றைப் பாதுகாப்பதற்கு அங்கத்துவ நாடுகள் காட்டும் அக்கறை குறைவடைந்து விட்டதனால் இவைகள் பயனற்றவைகளாக மாறிவிட்டன. ஐக்கிய நாடுகள் சபை தலைமைச் செயலகத்திற்கும் பாதுகாப்புச் சபையின் நிரந்தர அங்கத்துவ நாடுகளுக்கும் இடையில் சர்வதேச மனிதாபிமானச்சட்டம் மற்றும் மனித உரிமைகள் சட்டம் போன்றவற்றைக் கண்காணிப்பது மற்றும் பாதுகாப்பது தொடர்பாகப் பொருத்தமான இணைப்பு இல்லை எனவும் கூறப்படுகிறது.

பாதுகாப்புச் சபையினால் ஐக்கிய நாடுகள் சபையின் உத்தியோகத்தர்கள் தவறாக வழிநடாத் தப்படுகின்றனர். உலகில் கொடுமையான மனிதப் படுகொலைகள் நிகழும் போது ஐக்கிய நாடுகள் சபை எவ்வாறு செயலாற்ற வேண்டும் என்பது தொடர்பாகப் பாதுகாப்புச் சபையே தீர்மானிக்கின்றது. சராசரி மனித உணர்வுகள் பாதுகாப்பு சபையினால் கருத்தில் கொள்ளப்படுவதில்லை. பதிலாகப் பாதுகாப்புச் சபை உறுப்பு நாடுகளின் உச்ச நலனே கருத்தில் கொள்ளப்படுகின்றது. இதனால் ஐக்கிய நாடுக்கள் சபை திரும்பத் திரும்ப தோல்வியடைகின்றது. இலங்கையில் ஐக்கிய நாடுகள் சபைக்கு ஏற் பட்ட தோல்வி ஐக்கிய நாடுகள் சபையின் இரத்தம் தோய்ந்த வரலாற்றில் ஏற்பட்ட முதல் தோல்வியுமல்ல, இறுதித் தோல்வியுமல்ல. புதிய உலக ஒழுங்கிற்கு ஏற்றவகையில் ஐக்கிய நாடுகள் சபை மறு சீரமைக்கப்படவில்லை. குறிப்பாக பாதுகாப்புச்சபை இதுவரை மறுசீரமைக்கப்பட வில்லை. இதனால் ஐக்கிய நாடுகள் சபை கொடுமையான மனிதப் படுகொலைகள் நிகழும் போது அதனைத் தடுக்க முடியாமல் தடுமாறு கின்றது.

இனப்படுகொலைக் குற்றவாளிகள், மக்கள் படுகொலைக் குற்றவாளிகள் அரசாங்கத்தின் ஆதரவில்லாமல் வெற்றிகரமாக இவற்றினை செய்ய முடியாது. இக்குற்றவாளிகள் இதற்கான பணத்தினை சேமித்துக் கொள்வதற்காக நிதி வலைப் பின்னல்களை உருவாக்கியுள்ளார்கள். மக்கள் படுகொலைகளுக்கு பயன்படுத்தும் நிதியினை வழங்கும் அரசாங்கங்கள், நிறு வனங்கள் இதற்காக வெட்கப்பட வேண்டும்.

மக்கள் படுகொலைகளுக்குப் பயன்படும் நிதிகளுக்கான வங்கிக் கணக்குகளின் செயற்பாடுகளை நிறுத்துவதற்கும் உலக நாடுகள் முன்வரவேண்டும். இனச்சுத்திகரிப்பு போன்ற மனிதப்படுகொலைகளிலிருந்து தனது நாட்டு மக்களைப் பாதுக்காக்க வேண்டிய பொறுப்பு ஒவ்வோரு நாட்டிற்கும் உள்ளது. சட்டத்திறமையின்மையால் மனிதப்படு கொலைகளிலிருந்து மக்களைப் பாதுகாப்பதில் அரசுகள் தோல்வியடையுமானால் பாதிக்கப்பட்ட மக்களைப் பாதுகாக்கின்ற பொறுப்பு சர்வதேச சமூகத்திற்குரியதாகும். இக்கொள்கையானது ஐக்கிய நாடுகள் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட பின்னர், பாதுகாப்பிற்கு பொறுப்பு என்ற கொள்கையாக இது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. எனவே கொடுங்கோன்மையான ஆட்சியிலிருந்து சிறுவர்கள், பெண்கள் உட்பட பல இலட்சம் மக்களைப் பாதுகாக்க வேண்டி பொறுப்பு மிக்க தலைவர்களை தெரிவு செய்ய வேண்டிய கட்டாயதேவை உருவாகியுள்ளது. ஏனெனில் எல்லோரும் ஒன்றுபட்டு மக்கள் படுகொலைகளைத் தடுத்து, இனப்படு கொலைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். மக்கள் படுகொலைகளைத் தடுத்தல் என்பது முதல்நிலை அரசியல் விருப்பமாக மாறவேண்டும். மக்கள் படுகொலைகள், இனப்படுகொலைகள் போன்றவற்றைத் தடுப்பதற்கான சரியான தெரிவினை செய்யக்கூடிய தலைவர்களை உருவாக்குவது தொடர்பான கலந்துரையாடலும், செயற்பாடுகளும் அவசியமாக்கப்படுதல் வேண்டும்.

**உசாத்துணை**


1. Anapayan, 2012, Ground views. **On Critiquing of UN Failures: Missing the Wood for the Trees.** Available at http://groundviews.org/2012/11/15/ on critiquing of un Failures missing the Wood for the trees.
2. **An Agenda for Peace Preventive diplomacy, peace - making and peace keeping,** Report of the secretary - General, pursuant to the statement adopted by summit Meeting of the security Council on 31 January 1992.Available at. http/www.unrol org/files/A 47 277pdf
3. **Convention on the Prevention and Punishment of the Crime of Genocide,** Adopted by Resolution 260 (III) A of the United Nations General Assembly on 9 December 1948. Available at http/ www.hrweb. org/legal/genocide.html
4. Gareth Evans and Mohamad sahnoun.2001, **The Responsibility to protect,** Report of the international Commission on Intervention and state Sovereignty. International Development Research Centre, Canada, Available at http//responsibility to protect org/ ICISS%20Report pdi
5. Darfur Genocide. 2003 - present. **World Without Genocide - 2013,** Available at http/world Without genocide. org/ wp - content / uploads/ 2010/01/Darfur - Genocide. World Without Genocide.Pdf
6. **Genocide in Darfur?** The United Human Rights Council,Available at http//www.unitehumanrights. org/genocide/genocide in - sudan - htm
7. General Assemble Security Council 21 August 2000, Report of the panel on United Nations peace Operations, A/55/305 S/2000/809, Available at http/www.un.org/en/ga/search/view doc.asp?symbol = A/55/305
8. James P.Finkel Atrocity Prevention at the Crussroads : Assessing the President's Atrocity Prevention Board after Two Years centre for the Prevention of Genocide Series of Occasional Papers, No 2/ septemper 2014, Available at. http/www.ushmm.org/in/pdfs/20140904- linked - atrocity - prevention - report . Pdf

9. Jonathan Powell 2012 Kofi Annan has nothing to apologise for New statementAvailable at http/ www. newstatament com/ politics/ 2012/10/10/kofi - annan has - nothing apologise

10. Juan Garrigues, 2007 The responsibility to protect from an ethical principal to an effective poliey, FRIDE'S peace/ security and Human Right Programme .Availableat http/ www.responsibility toprotect arg/files/responsibilidad proteger.pdf

11. Report of the Secretary - General's Internal Review panel on United Nations Action in Srilanka. November. 2012. Available at http/ www. on. org/ News /dh/ infocus/ srilanka/ the internal Review Panel report on srilanka.pdf

12. Report ot the Independant inquiry into the actions of the Untited Natrions during the 1994 genocide in Rwanda, December 15, 1999, Available at http/www.seurity council report org/atf/sl%/7B5BCF9B - 6D27 - IE9C 8CD3 CE6E4FF961F9% 7D/Poc% 20S199991257pdf

13. Reuters, 2012 U.N.failed gravely in srilanka - internal review pancl. Available at http/uk.reuters.com/ article/ 2012/11/15/lk - srilanka un idUKBRI 8ADJ920121115

14. Rome Statute of the International Criminal Court, Text of the Rome Statute Circulated as document A,CONF.183,9 of 17 July 1998 and corrected by process - verbaux of 10 November 1998, 12 july 1999, 30 November 1999, 8 may 2000, 17 January 2001 and 16 January 2002 The Statue entered into force on 1 July 2002 Available at http/www.jee.nr,rdonlyres,ea9ac117 - 5752 - 1184 - he94 - oa655eb 16,0,rome statue english pdf

15. R2P - A Short History, UNRIC provides information on UN activities to the countries of the region, United Nations Regional Information Centre for Western Europe. Available at http/www.unrie.org/ en/ga/search/view/doc?sympolS/RES/1674 (2006)

16. Security Council Resolution 1674 (2006) Adopted by the Security Council at its 5430th meeting, on 28 April 2006, Available at http/www.on.org/en/ga/searsh/view.doc asp?sympol- S/RES/1674(2006)

17. Security Council Resolution 1820 (2008)Adopted by the Security Council at its 5916th meeting on 19 June 2008, Available at http/www.Security/ Council/ Reort. org, atf/cf%7B65BFCI CE9B-6D27 - iE9C - 8CDJ- CF6E4FF96EF9% 7D/CAC% 20S20RES% 201820.pdf

18. Shocking report details the UNS failure protect the people of srilanka. November 16 2012. The International Coalition for the Responsibility to protect (ICR to p) , Available at http//icrtoblog. org/2012/11/16/ shocking report details the uns failure - to - protect - the - Ãole/of/srilanka/

19. UNNEWS Centre . 2012. Following report on activities in Srilanka War. Ban determined to strengthen UN responses to crises, Available at http/www.un .org/apps/news/story.asp?NewsHD - 43496# VMSP 6UIVH

20. United Nations General Assembly, 24 october 2005, 2005 World Summit Outcome, Sixtiethsession Agenda items 46 and 120ï Available at http/ www. un/ en/genocide/sdviser/pdf/World%20Summit%20 Qutercome%201)Ocume nt.Pdf Page = 30

21. U.S Óesident Obama launclies Atrocity Prevention Board 25 April 2012ï The international Coalition for the Responsibility to protect (ICRtop). Available at http//www.responsiblity toprotect org/index/ php/compoment/ content/ article/ 352cs topics/ 4137 - us President - obama - launches - alrocity - prevention - board